**அதுரெலிய பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அதுரெலிய பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அதுரெலிய பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் (6)(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் (6)(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி இவ்வறிக்கையின் 1.6.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள (உ) அவதானிப்பு தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்களின் தன்மையில் காணப்படாத பொருட் பதிவேட்டு மற்றும நுகர்வுத் தன்மை உள்ள உபகரணங்கள் மற்றும் பண்டங்கள் 165 வகைக்குரிய ரூபா 311,360 தொகை பெறுமதியான 1080 விடயங்கள் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்கள் தன்மையில் காணப்படாத பொருட் பதிவேட்டு மற்றும் நுகர்வு தன்மையுள்ள பண்டங்களை இனங்கண்டு கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஊழியர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,545,178 தொகை எனினும் ரூபா 5,247,647 தொகை என ரூபா 297,531 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆண்டிற்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய பலவின செலவுகள் ரூபா 334,456 தொகைக்காக பலவின கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது சபையினால் அரச வங்கி ஒன்றில் பேணிச் சென்றுள்ள 05 நிலையான வைப்புக்களுக்காக பெற வேண்டிய வட்டி ரூபா 67,656 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | | |
| (உ) | கடந்த ஆண்டு திப்படுவாவ மற்றும் வில்பிட பொது நூலகங்களுக்கு நன்கொடையாக கிடைத்திருந்த 63 புத்தகங்களின் பெறுமதியை கணித்து மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்திருக்கவில்லை. | புத்தகங்களின் பெறுமதி புத்தகங்களை வழங்கும் நிறுவனங்களில் இருந்து உறுதிப்படுத்திய பின்னர் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 7,977,702 தொகைக்கான 06 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே கூட்டுத்தொகை ரூபா 748,595 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | 2022 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 இணங்காமை

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் | 02 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 1,617,385 தொகை பெறுமதியான திருப்பிச் 69 | வைப்பு மீதிகள் தொடர்பாக பரிசோதனை செய்து | பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கோவை<br>நி.பி. 571 | செலுத்த வேண்டிய வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானத்துக்கு எடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 315,020 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 2,384,803 தொகையாகும்.

### 2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

#### (அ) வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 1538 வீதவரி அலகுகள் காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு 877 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 1,668,129 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

#### (ஆ) கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 23 கடையறைகள் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன் வருட இறுதியில் உள்ளவாறு 11 கடையறைகளில் இருந்து நிலுவைக் கடை வாடகை ரூபா 276,303 தொகை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை மீதியில் ரூபா 67,925 தொகை அறவீடு செய்யப்பட்டதுடன், மீதி நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக தேவையான ஆவணங்கள் அனுப்பப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

#### (இ) சபையின் ஆதனங்களை குத்தகைக்கு கொடுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான 08 ஆதனங்கள் குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன் குத்தகைக்கு கொடுத்திருந்த 06 மீன் பலகைகளில் இருந்து ரூபா 133,304 இற்கான நிலுவை வாடகை வருமானம் ஒன்று காணப்பட்டது. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 3 ஏக்கர் 12 பர்சஸ்களுக்கான அக்குரஸ்ஸ கம்புறுபிட்டிய பாதையில் அமைந்துள்ள பல்லேகொடஹேன எனப்படும் காணியின் 40 பர்சஸ் துண்டு மீண்டும் துணைப் பகிர்வு செய்வதற்காக இலக்கம் 935/6 மற்றும் 1996 வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தரைப் பகுதியில் 10% பொது அலுவல்களுக்காக வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்கு உரித்தாக்கப்பட வேண்டியிருந்த காணிப் பகுதியை உரிய முறையில் உரித்தாக்கி பொது விடயங்களுக்காக பயன்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 10% பகுதியை வழங்குவதற்காக மீண்டும் ஞாபகர்த்த கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது எனவும் அது தொடர்பாக செயற்படாதுவிடின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2020 ஒக்தோபர் 19 திகதிய BA/AT/12/2020 இலக்கங் கொண்ட கட்டிட விண்ணப்பத்துக்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் 2020 ஒக்தோபர் 19 திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட வரைபின் படி இரு மாடிக் கட்டிடம் ஒன்றிற்காக கொங்கிரீட் தகடு போடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு திசெம்பர் 13 திகதி வெளிக்கள கணக்காய்வு பரிசோதனையின் போது அங்கீகரிக்கப்பட்ட வரைபுக்கு இணங்காத வகையில் 03 மாடிக் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் மோட்டார் வாகனங்களை நிறுத்துவதற்காக ஒதுக்கப்பட வேண்டிய காணிப் பகுதி ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைப் பகுதிக்குரிய சேவைக் கட்டணம் செலுத்தி அங்கீகரித்துக் கொள்ளும் படி இந்த கட்டிட விண்ணப்பத்திர உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | முறையான அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் இன்றி மேற்கொள்ளப்படும் நிர்மாண வேலைகளை முறைப்படுத்துவதற்காக அல்லது அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பல்வேறு காரணங்களினால் அங்கீகாரம் மறுதலிக்கப்பட்ட கட்டிட விண்ணப்பங்கள் தொடர்பாக 03 நிர்மாண வேலைகளுக்கான கட்டிட நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு அல்லது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றதுடன், அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் 02 கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த நிர்மாண வேலைகள் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டம் மற்றும் அபிவிருத்திக் கட்டளைகள்/ பிரமாணங்கள் உள்ளடங்கிய 2021 ஜுலை 08 திகதிய 2235/54 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆவது அட்டவணையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து ரூபா 509,914 இற்கான கட்டணத்தை அறவீடு செய்து முறைப்படுத்துவதற்காக அல்லது அகற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை முறைப்படுத்திக் கொள்ளும் படி அறிவிக்கப்பட்டது எனவும், அவ்வாறு செய்யப்படாவிடின் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |